O.S.No. 208-2012
21.09.2021

பி.வா.சா.1. திரு. விஜய்பாபு த.பெ.செல்லத்துரை

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் எப்போது பிறந்தேன் என்றால் 18.04.1983. தாவா சொத்துக்களை கிரயம் வாங்குவதற்கு முன்னர் வில்லங்க சான்றிதழ் வாங்கினேனா என்றால் வாங்கினேன். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்கள் சம்பந்தமாக எனக்கு நேரிடையாக எதுவும் தெரியாது என்றால் தெரியும். தாவா சொத்துக்ள் பற்றி எந்த வருடத்தில் தெரியும் என்றால் 2000-ம் ஆண்டிலேயே தெரியும். தாவா சொத்துக்கள் பற்றி யார் மூலம் தெரிந்து கொண்டேன் என்றால் என் தந்தையிடம் இருந்து தெரிந்து கொண்டேன். 2000-ம் ஆண்டில் தாவா சொத்துக்கள் குறித்து நான் தெரிந்து கொள்ள என்ன அவசியம் ஏற்பட்டது என்றால் நான் 2000-ம் ஆண்டில் பனிரெண்டாம் வகுப்பு படிக்கும் போது எனக்கு பணம் தேவை ஏற்பட்ட போது எங்கள் சொத்தை பற்றி என் தந்தையிடம் கேட்டேன். இந்த சொத்தை நான் ஏன் குறிப்பாக கேட்டேன் என்றால் சொத்தை அடமானம் வைப்பதற்காக கேட்டேன். நான் அவ்வாறு என் தந்தையிடம் கேட்டு தெரிந்து கொண்ட காலத்தில் தாவா சொத்து எங்கள் பெயருக்கு கிரயம் செய்து வைத்திருக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் இந்த தாவா சொத்தை 11.10.2010-ல் கிரயம் வாங்கினேன் என்றால் சரிதான். அசல் கிரயப்பத்திரத்தை இந்த நீதிமன்றத்தில், இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அசல் கிரயப்பத்திரம் எழுதப்பட்ட போது எங்களுக்கு ஆரதவு ஆவணங்கள் எழுதப்பட்டதாக பத்திரத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கு என் அப்பா எந்த வருடத்தில் இருந்து உழவடை செய்து வருகிறார் என்றால் 1978 லிருந்து உழவடை செய்து வருகிறார். குத்தகை ஒப்பந்த பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். யார் யார் குத்தகை ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால் 1978 ல் என்னுடைய சின்ன தாத்தா செல்லையா, என் தந்தைக்கு ரூபாய். மூவாயிரம் செலுத்தி உழவடையை மாற்றம் செய்து கொடுத்தார். ஒரு நிலத்தை குத்தகைக்கு விடும்போது குத்தகைதாரரும் நிலத்திற்கு சொந்தக்காரரும் சேர்ந்து ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டும் என்றாலும் அவ்வாறு மேற்படி பத்திரத்தில் எவ்வாறு ஏற்படுத்தினார்கள் என்றால் நிலச்சுவான்தார் அழகப்ப செட்டியார் ஆவார், குத்தகையை என் தந்தை பெற்றார், செல்லையா என் தந்தைக்கு எழுதிக்கொடுத்தார். மேற்படி குத்தகை பத்திரத்தை யார் யார் எழுதிக்கொண்டார்கள் என்றால் இதற்கு முன்னால் சுவான்தார் அழகப்பா செட்டியாரும், செல்லையாவும் குத்தகை ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொண்டார்கள், எந்த வருடம் என்றால் தெரியாது. செல்லையாவும், அழகப்ப செட்டியாரும் ஏற்படுத்திககொண்ட உழவடை பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் உழவடை பட்டாவை பார்த்துள்ளேன். செல்லையாவிற்கு முன்னால் தாவா சொத்தை யார் குத்தகைக்கு உழவடை செய்தார் என்றால் தெரியாது. செல்லையா எந்த உரிமையின் அடிப்படையில் குத்தகைக்கு தாவா சொத்தை ஒப்புக்கொண்டு உழுதார் என்றால் நிலச்சுவான்தார் சொன்னதன் அடிப்படையில் உழுதார். அந்த குத்தகை ஒப்பதந்ததின் போது நான் இல்லை என்றால்

O.S.No. 208-2012
21.09.2021

பி.வா.சா.1. திரு. விஜய்பாபு த.பெ.செல்லத்துரை

வாதி தரப்பு குறுக்கு  விசாரணை தொடர்ச்சி

சரிதான். செல்லையாவும், நிலச்சுவான்தார் அழகப்பா செட்டியாரும் எழுதிக்கொண்ட உழுவடை பத்திரத்தை தாக்கல்செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் கருத்தான் அம்பலம் 1969 க்கு முன்பிருந்தே வள்ளியப்ப செட்டியார் என்பவரிடம் சாகுபடி செய்து அது தாலுகா உழவடை பதிவில் பதிவாகி உள்ளது என்றால் சரிதான், அவ்வாறான ஆவணத்தை பார்த்துள்ளேன், ஆனால் அது தவறு. வா.சா.ஆ-1, வா.சா.ஆ-2, வா.சா.ஆ-3 ஆகியவற்றில் கருத்தான் அம்பலம் குத்தகைதாரர் என்று பதிவாகியுள்ளது என்றால் மேற்படி 3 ஆவணங்களும் நிர்மலா தேவி என்பவரால் போலியாக கையெழுத்து செய்யப்பட்டது. மேற்படி 3 ஆவணங்களில் உள்ள பதிவுகள் தவறு என்று கூறி, வள்ளியப்ப செட்டியாரோ, அழகப்பா செட்டியாரோ ஏதேனும் நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ-2 ல் நிலச்சுவான்தார் பெயராக வள்ளியப்ப செட்டியார் பெயர் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-2 ல் செல்லையா பெயரை குத்தகைதாரராக காட்டவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-3 ல் வள்ளியப்ப செட்டியாரை சுவான்தாராக காட்டியுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-4-ல் அழகப்பா செட்டியார் சுவான்தாராக காட்டப்பட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ 3 மற்றும் பி.வா.சா.ஆ-4 ஆவணங்களிலும் என் தகப்பனார் செல்லத்துரை குத்தகைதாரராக காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-5 மற்றும் பி.வா.சா.ஆ-6 ஆகியவை டவுன் சர்வே சம்பந்தபட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ-6 ஆவணத்தில் 15 வது கலத்தில் விவசாய நிலங்கள் என்று போடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, கல எண் 18-ல் விவசாயம் என்று போடப்பட்டுள்ளது. மேற்படி 18 வது கலத்தில் வீட்டு மனையிடங்கள் என்று போடப்படவில்லை என்றால் சரிதான். நான் தாவா நிலத்தை குத்தகைக்கு என் பெயரில் பதியப்பட்டதா என்றால் இல்லை, என் தந்தை பெயரில் பதியப்பட்டது. வா.சா.ஆ-4 ஆவணம் நான் கிரயம் வாங்கிய பத்திரத்தின் நகல் என்றால் சரிதான். வா.சா.ஆ-4 ல் நான், என் தகப்பனார் உழவடையாக அனுபவித்தும், குத்தகை கொடுத்தும் என்று இருக்கிறதா என்றால் பக்கம் 7-லிலும் 8-லிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. என் தகப்பனாருக்கு, செல்லையா உழவடை மாறுதல் பத்திரம் எழுதிக்கொடுத்ததாக பி.வா.சா.ஆ-9 என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-9 ஆவணம் பதிவு செய்யப்படவில்லை மற்றும் சரியான முத்திரை கட்டணம் செலுத்தப்படவில்லை என்றால் அண்ணன் தம்பிக்குள் வாய்க்கரலாக கொடுக்கப்பட்ட காலம் என்பதால் அவ்வாறு செய்யப்படவில்லை. (பி.வா.சா.ஆ-9 ஆவணத்திற்கு குறைவாக முத்திரை கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் பதிவு செய்யப்படவில்லை என்றும் கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் மேற்கூறிய கேள்வியின் அடிப்படையில் பி.வா.சா.ஆ-9 ன் முத்திரை கட்டணம் குறித்து முடிவு செய்யும் பொருட்டு பி.வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)